

# நட்பின் இலக்கணம்

## ஏராளமான நண்பர்கள் என்பது பெருமையா?

சிலபேர் ரொம்பவும் பெருமையடித்துக் கொள்கிறார்கள், "என் நண்பர் வட்டம் எவ்வளவு பெரியது தெரியுமா?" என்று.

நட்பைப் பொறுத்தவரை அது கல்வியைப் போல, எவ்வளவு அகலமானது என்பது முக்கியமல்ல. எவ்வளவு ஆழமானது என்பதே முக்கியம்.

ஒரு துன்பம், ஒரு சோதனை என்றதும் இவர் குறிப்பிடும் நட்பு வட்டம் துணை நிற்குமா அல்லது உதறிய நெல்லிக்காய் மூட்டையாய்ச் சிதறி ஓடுமா என்பது கேள்வி.

“இடுக்கண் களைவதாம் நட்பு” என்று நட்பிற்கு இலக்கணம் வகுக்கிறார் வள்ளுவர்.

துன்பம் வரும்போது துணை நிற்காமல் தூர ஓடுபவனா நண்பன்? துன்பம் எனும் கல்லுக்கு ஆயிரம் காக்கை நண்பர்களை விரட்டவல்ல சக்தி உண்டு. இதனையே சாக்கிட்டு, நட்பு என்ற பெயரால் அட்டையாய் உறிஞ்சி நம்மை ஒருவழி செய்துவிடுகிறவர்கள் உண்டு. இவர்கள் நட்பெனும் இசைக்குள் நாரகாசம் புரிபவர்கள்.

நட்பு என்றால் ஒருவன் தன்னையே

இழந்து பிறருக்கு உதவ வேண்டும் என்பது பொருளல்ல.

மனத் துன்பத்திற்கு மருந்தென ஆறுதலும் தேறுதலும் சொல்பவனும் உயர்ந்த நண்பன்தான்.

அரிய ஆலோசனைகளைச் சொல்லி, சிக்கலிலிருந்து விடுபட, உதவுவதும் உயரிய நட்பின் முன்னுதாரணம்தான்.

எதிர்பார்ப்புகளையே வாழ்க்கை முறையாகக் கொண்டுவிட்ட நண்பர்களுக்கு ஏமாற்றமே ஒவ்வொரு கட்டத்திலும் மிஞ்சும்.

வாயைத் திறந்து கேளாதபோதும் குறிப்பறிந்து உதவ முன்வருபவனே சிறந்த நண்பன். எவ்வித எதிர்பார்ப்பும் இன்றிச் சிறு உதவியெனினும் தக்க நேரத்தில் செய்பவனே உன்னத நண்பன்.

செய்கையின் அடிப்படையைவிட உள்ளத்தின் அடிப்படையில் ஒருவனை மதிப்பிடுபவனே நல்ல நண்பன்.

துரியோதனின் மனைவியும் கர்ணனும் சதுரங்கம் ஆடிக் கொண்டிருக் கிறார்கள். அங்கு வந்த துரியோதனனைக் கண்டு துரியோதனனின் மனைவி மரியாதைக்கு எழுந்து நிற்கிறாள்.

துரியோதனன் வந்ததை அறியாத கர்ணன், “என்ன இது! ஆட்டத்தின் பாதி யில் எழுகிறீர்கள்?” என்று அவளது மேலாடையைப் பற்றுகிறான். மேலாடை யிலிருந்த மணிகள் அறுந்து சிதறி ஓடுகின்றன.

கணவன் வருகை குறித்துத்தான் துரியோதனின் மனைவி எழுந்தாள் என்பதைக் கர்ணன் உணர்ந்து, ‘ஐயோ! நண்பனின் மனைவியின் உடையைப்

பற்றி இழுத்து விட்டேனே!' என்று பதறி நிற்கிறான்.

துரியோதனனோ அமைதியாய்க் கேட்கிறான். "சிந்திய மணிகளை நான் எடுக்கவா, கோர்க்கவா?" என்று.

கர்ணனின் செயல் மிகத் தவறானது. ராஜ குற்றம்! ஆனால் தன் நண்பன் கர்ணனின் உள்ளத்தைத் துரியோதனன் நன்கு அறிவான். அதனால்தான் "நண்பனாடா நீ? நாசகாரனே!" என்று குரலை உயர்த்தாமல் "எடுக்கவோ! கோர்க்கவோ?" என்றான். நட்பின் மகத்துவத்தை விளக்கும் புராணச் சம்பவம் இது.

மனிதர்களோ அற்பச் செயல்களுக்கு எல்லாம் இன்று நட்பை இழக்கத் துணிந்து விடுகிறார்கள். அவன் சரியில்லை. இவன் சரியில்லை. அப்படிப் பேசியது சரியில்லை. இப்படி நடந்து

கொண்டது முறையில்லை என்று புகார்ப் பட்டியலைப் பெரியதாய் வாசிக் கிறார்கள்.

நட்பை முறித்துக் கொள்ளப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் அதை வலுப்படுத்திக் கொள்ள ஒருசில காரணங்கள் போதும்.

நூலாம்படையை நூலாக்கி, நூலைக் கயிறாக்கி, கயிற்றைத் தாம்புக் கயிறாக்கி இதைக் கொண்டு நட்புத் தேரை இழுத்துச் செல்பவர்கள் கெட்டிக் காரர்கள். இதையே எதிர்மறையாகச் சிந்தித்தால் நட்பை வாழவைக்க முடியாது.

விவரம் புரியாத நாள்களில் அற்பக் காரணங்களுக்காக ஓர் இனிய நட்பை நாம் இழந்திருக்கலாம். இந்த நட்பிற்கு மீண்டும் உயிரூட்ட முடியும்.

என் பள்ளி நண்பன் ஒருவன் எதற்கெடுத்தாலும் வாதம் செய்வான். என்ன சொன்னாலும் அதற்கு எதிர்வாதம் முன்வைப்பான். முக நரம்புகள் புடைக்கக் கத்துவான். இவனைக் கண்டாலே எரிச்சலாக இருக்கும்.

பள்ளி முடிந்து கல்லூரி படிக்கையில் இவனை நான் பெட்ரோல் நிரப்பும் இடத் தில் காண நேர்ந்தது. “சே! இவனோடு எவன் போய்ப் பேசுவான்?” என்று முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

ஆனால் நாங்கள் பயின்ற சென்னை பனகல் பூங்கா ராமகிருஷ்ணா பள்ளியின் பழைய மாணவர் சங்கத்தின் மூலம் இந்த நண்பனுடன் கட்டாயச் சந்திப்பு ஒன்று ஏற்பட்டது.

என்ன ஆச்சரியம்! “என்னடா லேனா எப்படி இருக்கே? ஏண்டா என்னை

பெட்ரோல் பங்கில் பார்த்தும் முகத்தைத் திருப்பிக் கொண்டாய்? நான் முன்ன மாதிரி இல்லைடா! நிறைய மாறிட்டேன். என்னை ஒரு பிடிவாதக்காரன், சண்டை போடுவான் என்றுதானே ஒதுக்கினாய்? நம்ம நட்பு வளரணும்டா. அதுக்கு நான் என்னடா பண்ணணும்?" என்றான். ஆடிப் போனது மனது. இன்று என் மிக நெருங் கிய நண்பர்கள் வட்டத்தில் இவனும் ஒருவன். நட்பின் மேன்மையறியாத நாள்களில் அதை இழக்கத் துணிந்தேன். அதன் அருமையை இன்று உணர்கிறேன்.

புதுப்பிக்கப்படும் நட்பில் உள்ள இனிமை மிக மிக இனியது. அனுபவித்துப் பார்த்தால்தான் இது புரியும்.

## ஆண் - பெண் நட்பும் லஷ்மணக் கோடும்

ஓர் ஆணும் பெண்ணும் பேசிக் கொண்டாலே அதைக் காதல் என்றும் கள்ளத்தனம் என்றும் புது அர்த்தம் கற்பிக்கும் சமூகத்தின் மத்தியில் நாம் வாழ்கிறோம்.

மேலைநாடுகளில் இப்படி எடுத்துக் கொள்வதில்லை. வெகு இயல்பாக எடுத்துக் கொள்கிறார்கள். எத்தகைய சூழலில் வாழ்கிறோமோ அதை நாம் அவசியம் கணக்கில் எடுத்துக் கொண்டாக வேண்டும். சிரித்துப் பேசினால் அதைத் திரித்துப் பேசுகிற சமூகம் இது. ஆண்

பெண் பழகுவதில் சில சமூகங்களில் அழுத்தமான வரையறைகள் உள்ளன.

இவ்வளவு ஏன்? இந்த நவீன உலகில் சில கல்லூரிகளில் ஆண் பெண் பேசிக்கொள்வதற்குக் கூடத் தடை இருப்பதைப் பார்க்கிறோம்.

இத்தகைய சூழ்நிலைகளில் ஆண் - பெண் நட்புக்கு எவ்வளவு புனிதம் இருந்தாலும் அது யோசிக்க வேண்டிய விஷயம்தான்.

ஆண் - பெண் நட்பின் அனு மதிக்கப் பட்ட களங்களைப் பற்றித்தான் இப்போது பேச்சு. உடலால் உள்ளத்தால் சொல்லால் லஷ்மணக் கோடுகளை அவசியம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

லஷ்மணக் கோடு தெரியுமல்லவா?

"தாண்டாதீர்கள் அண்ணி!" எனச் சீதைக்கு லஷ்மணன் வரைந்த எல்லைக் கோடு அது.

இருபாலர் கல்லூரிகளில் மாணவ மாணவிகள் சிலர் நடந்து கொள்வதைப் பார்த்தால் நமக்குத் தலை சுற்றுகிறது.

இதிலென்ன தவறு? என்று சில உரிமை மீறல்களை மேற்கொள்கிறார்கள். நம் பண்பாடு, காரணத்தோடுதான் நமக்கென எல்லைகளை வகுத்திருக்கிறது.

"எங்கள் நட்பு புனிதமானது. உங்கள் பார்வையில்தான் அசிங்கம் கலந்திருக்கிறது" என்று பேசுபவர்கள் தங்கள் கட்டுப்பாட்டை இழந்து பேசுகிறவர்கள்.

இடைவெளி காக்கத் தெரியாதவர்களுக்கு மாற்றுப் பாலின நட்புத் தேவையில்லை.

ஆண் பெண் நட்பின் உரையாடலின்போது வார்த்தைகள் தராசுத் தட்டில் நிறுத்தப்பட்டு எடை பார்க்கப்பட்டுப் பிறகு வழங்கப்பட வேண்டும்.

நாங்கள் பச்சையப்பன் கல்லூரியில் பட்ட மேற்படிப்பாகத் தமிழிலக்கியம் படித்த நாள்களில்தான் கோ-எஜுகேஷன் எனப்படும் இருபாலர் சேர்ந்து படிக்கும் முறை அறிமுகமானது.

காதலுமில்லாமல் காமமும் இல்லாமல் வேறு எந்த ஒரு கத்தரிக்காயும் இல்லாமல் ஆண் நட்பைப் போலவே பெண்களுடன் எந்த விகற்பமும் இல்லா

மல் பழகமுடியும் என்கிற உண்மை அப்போது தான் தெரியவந்தது.

எங்கள் வகுப்புத் தோழிகள் எங்கள் தோற்றத்தைப் பொருட்படுத்தவில்லை. உடைகளை இலட்சியம் செய்யவில்லை. வசதிகளை - வாகனங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

மாறாக எங்களது மதிப்பெண்களைத் தான் மதித்தார்கள். சொன்னால் நம்ப மாட்டீர்கள். கல்வியில் நாங்கள் கூடுதல் அக்கறை காட்டியது இவர்களது நட்புக் கிடைத்த பிறகுதான்.

வகுப்புத் தோழிகளுள் ஒரு சிலர் தங்களது இல்லங்களுக்கு அழைத்தார்கள். பதிலுக்கு நாங்களும் அழைத்தோம். புதுமைப்பித்தன் சிறுகதைகள் எங்க

ளுக்குப் பாடமாக வைக்கப்பட்ட காலமது. இந்தக் காலத்தில் உள்ளதுபோல் அப்போது அழகான தொகுப்புகள் வரவில்லை. ஒரேயொரு கையெழுத்துப் பிரதி. அதையே அனைவரும் வலம்வரச் செய்து படித்தோம். அதற்குள் கடிதம் ஏதும் வைத்து அனுப்பவில்லை என்பதையும் சொல்லியாக வேண்டும்.

ஆனால், வகுப்பில் அக இலக்கியத்தை அறுப்பு வகுப்புகளாக மாற்றிய ஆசிரியர் அறியாதபடி துண்டுச் சீட்டுகளைப் பரிமாறிக் கொண்டோம். அதே நேரத்தில் வரையறை காத்தோம்.

உடன்பயின்ற தோழிக்குத் திருமணம். வாழ்த்தப் போன நண்பர் திருமண வரவேற்பில் வரையறை

தெரியாமல் மிகைப்படியாக நடந்து கொண்டார். அதிகப்படியாகப் பேசினார். "யாரவன்?" என்று மணப் பெண்ணைத் தனிமைப்படுத்திக் கேட்டார் மணமகன். இந்த ஒரு கேள்வி புதுத் தம்பதிக்குள் இனம் புரியாத இடைவெளியை உண்டாக்கிவிட்டது.

ஓர் ஆணுக்கு இந்தச் சமூகம் எத்துணையோ சலுகைகளைத் தருகிறது. ஆனால் பெண்ணின் விஷயத்திலோ வீண் விமரிசனங்களை உலவவிட்டு வேடிக்கை பார்க்கிறது.

எனவேதான் மாற்றுப் பாலின நட்பென்றால் போட வேண்டும் லஷ்மணக் கோடு! என்கிறேன்.

## நட்புப் பெரிதா? உறவு பெரிதா?

நட்புப் பெரிதா? உறவு பெரிதா? என்கிற வாதத்தை எந்தப் பட்டிமன்றத் திலுமே தலைப்பாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் போலிருக்கிறது.

காரணம், மிகப் பெரும்பான்மை யினரின் தீர்ப்பு நட்புத்தான் பெரிது என்பது. உறவு என்பது மிக உன்னத மானது.

ஆனால் இதைத் தங்கள் மீது திணிக்கப்பட்ட ஒன்றாகத்தான் பலரும் எடுத்துக் கொள்கிறார்கள்.

இயற்கை தந்த இந்த இனிய பந்தம் நட்பிற்கு முரண்பாடானதல்ல. எதிரானது அல்ல.

நானறிந்து சித்தப்பா - பெரியப்பா பிள்ளைகள் கொண்ட ஒரு பெரிய குடும்பம். ஒன்றாக வாழவில்லை என்றாலும் விசேஷங்களுக்கு ஒன்றுகூடுவார்கள். இவர்கள் பழகுவதையும் ஒருவரை ஒருவர் உரிமையுடன் கேலி செய்து கொள்வதையும் பார்க்கும்போது இவர்கள் நண்பர்களோ என்றுதான் தோன்றும்.

இந்த இல்லத்துப் பெண்கள் அடிக்கிற அரட்டையைப் பார்த்து நான் அரண்டு போயிருக்கிறேன். ஒருவரை ஒருவர் இப்படி வாருவாரு என்று வாரிக் கொள்கிறார்களே, இது

சண்டையில் முடிந்துவிடாதா என்று கூடச் சற்றே அஞ்சியது உண்டு.

நல்லவேளை! அப்படி ஏதும் நிகழ்ந்தது இல்லை. காரணம் அவர் களுக்குள் உறவு என்கிற கயிற்றோடு நட்பு எனும் கம்பியும் சேர்த்துப் பின்னப் பட்டிருக்கிறது.

உறவுக்குப் பங்கம் வரும்போது நட்புணர்வு அங்கே எழும் கடின உணர்வை இலகுவாக்குகிறது.

நட்பிற்குச் சேதம் வரும்போலும் என்கிற சூழல் உருவாகிறபோது உறவு என்பது அடிநாதமாய் இருந்து அங்கு இன்னிசை முழங்குகிறது. உறவு சீர் கேடாவதே சில வீண் சம்பிரதாயங் களால்தான்.

நட்பு இப்படிப்பட்டதல்ல. நட்புணர்வு என்பது சம்பிரதாயங்களைக் கடந்தது.

நெடுநாளைய நண்பர். அதுவும் பள்ளிக்கால நட்பு. இந்த இரு நண்பர்களுள் ஒருவரது மகனுக்குத் திருமணம். இந்த ஆத்ம நண்பருக்கு அழைப்பு அனுப்ப எப்படியோ விடுபட்டு விட்டது. தவிர்க்க வேண்டும் என்பது நோக்கமல்ல. ஆனால் திருமணம் நடத்துபவர்களுக்கு உள்ள வேலைப் பளுவும் சிரமங்களும் என்னென்ன என்பதைப் பட்டியலிட்டா காட்ட வேண்டும்?

திருமணம் நடந்துகிறவர்களுக்கு ஒரு நேரம் உள்ள நினைப்பு மறு நிமிடம் இல்லை. புதியபுதிய பிரச்னைகளின் ஆக்ரமிப்புதான் இதற்குக் காரணம்.

இந்தக் குடும்பத்தில் இந்த இனிய நண்பருக்கு அழைப்பு அனுப்ப விடுபட்டு விட்டது. ஆனால் வேறு ஒருவர் மூலம் நண்பரின் மகன் திருமணம் பற்றி இவருக்குத் தெரிய வருகிறது.

"வா போகலாம் என்ன பிரச்னையோ அவனுக்கு" என்கிறார் தன் மனைவி யிடம்.

"அடப் போங்கங்க. அழைப்பே அனுப்பலையாம். இவரு வலியப் போறாராம். நீங்க வேணும்னாப் போங்க. என்னை ஆளை விடுங்க" என்கிறார் மனைவி.

சமாதானப்படுத்திவிட்டுத் திருமணத் திற்கு மனைவியுடன் போகிறார் நண்பர். நட்பு எனும் வலிமை வாய்ந்த சக்தி அவருக்குள் காந்த சக்தியை ஏற்படுத்து